**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்.**

முன்னிலை: **கா. நிலவரசன்,** B.A.,B.L,

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர், திருப்போரூர்.

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23 ஆம் நாள் திங்கட்கிழமை

**சுருக்கு விசாரணை வழக்கு எண்.693/2025**

**வழக்கின் சுருக்கம்**

(விதி 106 குற்றவியல் நடைமுறை விதிகள் மற்றும் நீதிமுறை படிவம் 61)

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | தமிழ்நாடு அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர், திருப்போரூர் காவல் நிலையம், குற்ற எண். 205/2024 |
| 2. | எதிரிகளின் பெயர் | 1. பாலாஜி,<br>2. விமல் |
| 3. | எதிரிகளின் தந்தை / கணவர் பெயர் | 1. ராயப்பன்,<br>2. கதிர்வேல் |
| 4. | எதிரிகளின் தொழில் | கூலி |
| 5. | எதிரிகளின் முகவரி | 1. எண்.3/61, மாதா கோவில் தெரு, சிறுங்குன்றம் காலனி, திருப்போரூர்.<br>2. எண்.4/473, கங்கையம்மன் கோவில் தெரு, பாலம்மா நகர், தையூர் கிராமம், திருப்போரூர். |
| 6. | எதிரிகளின் வயது | 1. 25/2024,<br>2. 38/2024 |
| 7. | எதிரிகளின் இனம்/சமுதாயம் (காண்க நீதிமுறை படிவம் 61) | – |
| 8. | குற்ற நிகழ்வு நாள் | 06.06.2024 |

| | | |
|---|---|---|
| 9. | இறுதி அறிக்கை/தனி நபர் புகார் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | 23.10.2025 |
| 10. | எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரான நாள் | 23.02.2026 |
| 11. | எதிரிகள் பிணையில் சென்ற நாள் | 07.06.2024 |
| 12. | வழக்கு அமர்வு நீதிமன்ற விசாரணைக்கு மாற்றப்பட்ட நாள் | எழவில்லை |
| 13. | விசாரணை தொடங்கப்பட்ட நாள் (பிரிவுகள் 207 மற்றும் 238 குவிமுச) | 23.02.2026 |
| 14. | விசாரணை முடிவுற்ற நாள் | 17.03.2026 |
| 15. | தீர்ப்பு/உத்தரவு நாள் | 23.03.2026 |
| 16 | எதிரிக்கு தீர்ப்பு நகல் வழங்கப்பட்ட நாள் | எழவில்லை |
| 17. | காலதாமத்திற்க்கான காரணம் | எழவில்லை |

இவ்வழக்கு 23.10.2025 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, கடந்த 17.03.2026 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் **கற்றறிந்த குற்ற உதவி வழக்கறிஞர் நிலை– i** அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.S.அபிஷேக்,** அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதமும், வழக்காவணங்கள் பரிசீலித்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

## தீர்ப்புரை

சிறுங்குன்றம் கிராமத்தை சேர்ந்த அ.சா.1 ற்கும் அவரது அக்காவின் குடும்பத்திற்கும் வீட்டுமனை வழி சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்த நிலையில், கடந்த 06.06.2024 அன்று இரவு சமார் 08.00 மணியளவில் அ.சா.1 அட்லஸ் நிறுவனம் அருகில் நடந்து சென்று கொண்டிருந்த போது எதிரிகள் இருவரும் சேர்ந்து அ.சா.1 ஐ வழிமடக்கி, ஓத்தா தெவிடியா பையா வழி கொடுக்கலைனா நீ பெரிய மயிறா என்று பொது இடத்தில் ஆபாசமாக திட்டியதாகவும், ஒழுங்கா வழி விடுங்க, இல்லையென்றால் உங்களுக்கு நானும் வழி தரமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்ததாக எதிரிகளின் மீது திருப்போரூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் பிரிவுகள் 341, 294(பி) மற்றும் 506(1) இ.த.ச–ன் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கின் எதிரிகள் அழைப்பாணையின் பேரில் இந்நீதிமன்றத்தில் ஆஜராகிய பிறகு பிரிவு 207 கு.வி.மு.ச–வின் கீழ் வழக்கின் ஆவணங்கள் இலவசமாக வழங்கப்பட்டு, எதிரிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கை குறித்து வினவியபோது, எதிரிகள் அதனை மறுத்துள்ளனர். எனவே எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றங்கள் குறித்து விசாரணை செய்ய அரசு தரப்பிற்கு இந்நீதிமன்றம் உத்தரவிட்டது.

3. அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகிய சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 ஆகிய சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்று பொருள் குறியீடு செய்யப்படவில்லை.

**4. அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்;**

i. மேற்கண்ட சம்பவத்தை தொடர்ந்து அ.சா.1 07.06.2024 அன்று மாலை 04.00 மணியளவில் திருப்போரூர் காவல் நிலையத்தில் அ.சா.ஆ.2/புகார் கொடுத்துள்ளார். அந்த புகாரை பெற்ற இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி காவல் உதவி ஆய்வாளர் திரு.கோபிநாதன் என்பவர் அப்போதே குற்ற எண். 205/2024, ச/பி. 341, 294(பி) மற்றும் 506(1) இ.த.ச–ன் கீழ் அ.சா.ஆ.3/முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்.

ii. பின்பு அன்று மாலை 06.30 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் சுரேஷ் மற்றும் ஆதிகேசவன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ 4/பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.5/மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பின்பு சாட்சிகள் அ.சா.1, சுரேஷ், ஆதிகேசவன், வீரராகவன் மற்றும் பழனிவேல் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

iii. இவ்வழக்கின் எதிரிகளை அன்று மாலை 06.30 மணியளவில் கைது செய்து காவல் நிலையம் அழைத்து வந்து, நிலைய பிணையில் விடுவித்துள்ளார். பின்பு இவ்வழக்கின் புலன் விசாரணை நிறைவு செய்து எதிரிகளின் மீது மேற்கண்ட பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

5. எதிரிகளுக்கு எதிராக சொல்லப்பட்டுள்ள சாட்சியங்கள் குறித்து பிரிவு 313 (1) ஆ கு.வி.மு.ச–வின் கீழ் வினவியபோது எதிரிகள் தங்களுக்கு எதிரான சாட்சியங்களை மறுத்துள்ளனர். மேலும் தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் யாரும் இல்லை என்று தெரிவித்தனர்.

6. அரசு தரப்பில் தோன்றிய கற்றறிந்த குற்றவியல் உதவி வழக்கறிஞர் நிலை–I தனது வாதத்தில், எதிரிகளின் மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

7. மாறாக எதிரிகள் தரப்பில் தோன்றிய கற்றறிந்த வழக்கறிஞர் தங்களது வாதத்தில், எதிரிகளின் மீது சுமத்தப்பட்ட குற்றங்களை உறுதிபடுத்தும் வகையில் அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும்

சான்றாவணங்கள் அமையவில்லை என்றும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

8. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனத்துடன் பரிசீலிக்கப்பட்டது.

**இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது யாதெனில், எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.**

9. எதிரிகள் அ.சா.1 ஐ முறையின்றி வழிமறித்ததாகவும், பொது இடத்தில் ஆபாசமாக திட்டியதாகவும் மற்றும் கொலை மிரட்டல் விடுத்ததாக குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளது. அ.சா.1 கொடுத்துள்ள புகாரில், அ.சா.1 ன் அக்கா குடும்பத்தாருடன் சொத்து பிரச்சனை இருந்து வந்ததாகவும், அதன் காரணமாக சம்பவ நாளன்று எதிரிகள் அ.சா.1 ஐ முறையின்றி வழிமடக்கி, ஆபாசமாக திட்டியதாகவும் மற்றும் கொலை மிரட்டல் விடுத்ததாக குறிப்பிட்டுள்ளார்.

10. ஆனால் அ.சா.1 ஐ இந்நீதிமன்றத்தில் விசாரணை செய்த போது, எதிரிகள் தன்னுடைய உறவினர்கள் என்றும், கோபத்தில் புகார் கொடுத்துவிட்டதாகவும், எதிரிகள் தன்னை ஆபாசமாக திட்டவோ மற்றும் கொலை மிரட்டல் விடுக்கவோ இல்லை என்றும் எதிரிகளை இவ்வழக்கில் இருந்து விடுவிப்பதில் தனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் முரணாக சாட்சியம் அளித்துள்ளார்.

11. எனவே இவ்வழக்கின் பிரதான சாட்சியான அ.சா.1 அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ள நிலையில், இவ்வழக்கின் பிற சாட்சிகள் அனைவரும் விசாரணை செய்வதிலிருந்து விலக்கப்பட்டு, புலன் விசாரணை அதிகாரிக்கு பதிலாக அவரது கையெழுத்துக்களை பரிச்சயம் பெற்ற கேளம்பாக்கம் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்.

12. அ.சா.2 அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளித்திருந்தாலும், அவருடைய சாட்சியம் ஆவணங்கள் அடிப்படையில்

மட்டுமே அமைந்துள்ளது. எனவே அ.சா.2—ன் சாட்சியத்தின் அடிப்படையில் மட்டுமே எதிரிகளின் மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் அரசு தரப்பால் உறுதிப்படுத்தப்பட்டதாக தீர்மானிக்க முடியாது.

13. எனவே அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக எதிரிகளின் மீது சுமத்தப்பட்ட குற்றங்களான அ.சா.1 ஐ முறையின்றி வழிமறித்தது, பொது இடத்தில் ஆபாசமாக திட்டியது மற்றும் கொலை மிரட்டல் விடுத்தது ஆகியவை அரசு தரப்பால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**இறுதியாக, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி, எதிரிகள் பிரிவுகள் 341, 294(பி) மற்றும் 506(1) இ.த.ச வின் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானித்து, எதிரிகளை பிரிவு 255(1) கு.வி.மு.ச—வின் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

வழக்கு சொத்து இல்லை. எதிரிகள் எழுதிக்கொடுத்த பிணை பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்துதட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று (23.03.2026) இத்திறந்த நீதிமன்றத்தில் இவ்அவையறிய பகரப்படுகிறது.

NILAVARASAN KASI

Digitally signed by NILAVARASAN KASI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருப்போரூர்.**

**<u>அரசுத்தரப்பு சாட்சிகள்;</u>**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. ராஜகோபால் (காயமுற்ற புகார்தாரர்) |
| அ.சா.2 | திரு.சங்கர் (காவல் சிறப்பு உதவி ஆய்வாளர்) |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்;–</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 07.06.2024 | புகாரில் உள்ள அ.சா.1 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | 07.06.2024 | புகார் |
| அ.சா.ஆ.3 | 07.06.2024 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 07.06.2024 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.5 | 07.06.2024 | மாதிரி வரைபடம் |

**<u>அரசு தரப்பு சான்று பொருள்,–</u>** இல்லை

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்;</u>**

இல்லை.

**குறிப்பு;–**

| | |
|---|---|
| 1. | இவ்வழக்கின் எதிரிகள் கடந்த 07.06.2024 அன்று கைது செய்யப்பட்டு, காவல் நிலைய பிணையில் விடுவிக்கபட்டுள்ளனர். |
| 2. | இவ்வழக்கின் சாட்சிகள் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை. |
| 3. | தீர்ப்பு சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| 4. | இத்தீர்ப்பின் நகல் மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர், செங்கல்பட்டு அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. |

NILAVARASAN KASI

Digitally signed by NILAVARASAN KASI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருப்போரூர்.**